செ.வெ.எண்: 32 / ஜூலை /2020 நாள்: 08.07.2020

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில் ஸ்ரீரங்கம், அரியமங்கலம், பொன்மலை, கோ.அபிஷேகபுரம் ஆகிய நான்கு கோட்டங்களில் உள்ள 65 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கையாக மருத்துவ அலுவலர் தலைமையில் சுகாதார அலுவலர், சுகாதார ஆய்வாளர், உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், பில் கலெக்டர், சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் களப்பணியாளர்கள் ஆகியோர் 65 குழுக்களாக பணியில் ஈடுபடுவார்கள்.**

**வருவாய்த்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை ஆகிய துறை அலுவலர்கள் இணைந்து 65 வார்டுகளிலும் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு குழு ஒருங்கிணைந்து பணியாற்ற உள்ளனர். ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையங்கத்தில் இன்று (08.07.2020) நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.**

-------------

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கையாக வருகின்ற 31.07.2020 வரை பல்வேறு கட்டுபாடுகளுடனும், தளர்வுகளுடனும் ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த மத்திய, மாநில சுகாதாரத்துறை வழிகாட்டுதிலின்படி, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் இருந்தும் இ.பாஸ் மூலம் வருகைபுரிந்தவர்கள் மற்றும் இ-பாஸ் இல்லாமல் வருகை புரிந்தவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு நோய் உள்ளதா என கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்தவும் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள அனைத்து குடியிருப்பில் உள்ள அனைத்து நபர்களின் உடல்நிலை பரிசோதனை செய்யவும் 65 வார்டுகளிலும் குழு அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து விமானம் மூலம், உள்நாட்டு விமானங்கள் மூலம் வரும் பயணிகளையும், இரயில் மூலம் வரும் பயணிகளையும், வெளிமாநிலங்கள், மாநிலங்களுக்கு இடையில் சாலை வழியாக வருபவர்கள் மற்றும் இதர வழிகளில் வருபவர்களையும் அடையாளம் கண்டு அவர்களை 14 நாட்கள் வீட்டில் தனிமைப்படுத்த வேண்டும்.

**கொரோனா வைரஸ் நோய் பரவுதலை தடுப்பதற்கு பொதுமக்கள் தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை தவிர்க்க வேண்டும். வெளியில் வரும்போது முகக்கவசம் அணிந்து வர வேண்டும். பொது இடங்களில் மற்றும் கடைகளில் சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். இந்த மூன்று வழிமுறைகளையும் கடைப்பிடித்தால் முற்றிலுமாக கொரோனா வைரஸ் நோய் பரவுதலை தடுக்கலாம்.** நாள்தோறும் 1150 நபர்களுக்கு கொரோனா வைரஸ் நோய் பரிசோதனை செய்யப்படுகிறது. கபசுரக்குடிநீர், ஆர்சானிக் என்ற 30 மாத்திரைகள் ஆகியவற்றை உட்கொண்டு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மேலும், அரசு

அறிவித்த ஜிங்க் மற்றும் வைட்டமின் மாத்திரைகளை உட்கொண்டு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நமது மாவட்டத்தில் ஒரு தனியார் நிறுவனத்தில் மட்டும் கொரோனா வைரஸ் நோய் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இந்த பரிசோதனை நிறுவனத்தில் தவறாக அறிக்கை கொடுக்கப்பட்டதால் பல்வேறு புகார்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு வந்துள்ளது. அதன் அடிப்படையில் அந்த நிறுவனத்திற்கு அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகின்றது. அறிக்கை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இக்கண்காணிப்புக்குழு மாநகராட்சிப் பகுதிகளான ஸ்ரீரங்கம், அரியமங்கலம், பொன்மலை, கோ.அபிஷேகபுரம் ஆகிய நான்கு கோட்டங்களில் உள்ள 65 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கையாக மருத்துவ அலுவலர் தலைமையில் சுகாதார அலுவலர், சுகாதார ஆய்வாளர், உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், பில் கலெக்டர், சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் களப்பணியாளர்கள் ஆகியோர் 65 குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தந்தப் பகுதியில் வீடு, வீடாகச் சென்று பரிசோதனை மேற்கொண்டு பொதுமக்களுக்கு சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளனவா என கண்காணிக்க உள்ளனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ.லோகநாதன், இ.கா.ப., திருச்சிராப்பள்ளி மாநகர காவல் துணை ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) திருமதி என்.எஸ்.நிஷா, இ.கா.ப., திருச்சிராப்பள்ளி மாநகர காவல் துணை ஆணையர் (குற்றம் மற்றும போக்குவரத்து) திரு.ஆர்.வேதரத்தினம், மாநகராட்சி ஆணையர் திரு.எஸ். சிவசுப்பிரமணியன், ஸ்ரீரங்கம் காவல் உதவி ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு.ஜி.மணிகண்டன், வருவாய்த்துறை அலுவலர்கள், காவல்துறையினர், மாநகராட்சி, சுகாதாரத்துறை ஆகிய துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**